TAMILTH Chennai 1 TNadu_01 J. JENIVAR SUJITH KUMAR 220402
© 2006-2017 Kasturi & Sons Ltd. - -abhijit.m@hindutamil.co.in -



## தமிழகம் உட்பட 8 மாநில முதல்வர்களுடன்

# பிரதமர் மோடி இன்று ஆலோசனை

### ● கரோனா தடுப்புப் பணிகள் குறித்து கேட்டறிகிறார்

■ சென்னை

கரோனா பரவலை கட்டுப்படுத்தும் பணிகள் குறித்து தமிழக முதல்வர் பழனிசாமி உட்பட 8 மாநில முதல்வர்களுடன் பிரதமர் நரேந்திர மோடி இன்று காணொலி காட்சி மூலம் ஆலோசனை நடத்துகிறார்.

கரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த கடந்த மார்ச் 24-ம் தேதி நள்ளிரவு முதல் நாடு முழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. 7-ம் கட்டமாக ஆகஸ்ட் 31-ம் தேதி நள்ளிரவு வரை ஊரடங்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் கரோனாவால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரிக்கிறது. நேற்றைய நிலவரப்படி 22 லட்சத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். குணமடைந்து வீடு திரும்புவோர் எண்ணிக்கை 69.33 சதவீதமாக உயர்ந்துள்ளது. இறப்பு எண்ணிக்கை 2 சதவீதமாக குறைந்துள்ளது.

ஒவ்வொரு முறையும் ஊரடங்கு நீட்டிக்கப்படும் முன்னர், மாநில முதல்வர்களுடன் பிரதமர் மோடி காணொலி காட்சி மூலம் ஆலோசனை நடத்துவார். இந்நிலையில், கரோனா பாதிப்பு அதிகரித்துள்ள தமிழகம் உள்ளிட்ட 8 மாநில முதல்வர்களுடன் பிரதமர் மோடி காணொலி காட்சி மூலம் இன்று காலை 10.30 மணிக்கு ஆலோசனை நடத்துகிறார்.

இதில் தமிழகம், ஆந்திரா, தெலங்கானா, பிஹார், மகாராஷ்டிரா, உத்தர பிரதேசம், குஜராத், பஞ்சாப் ஆகிய மாநில முதல்வர்கள் பங்கேற்க உள்ளனர்.

தமிழகத்தை பொறுத்தவரை, கரோனா பாதிப்பு 3 லட்சத்தை கடந்துள்ளது. சென்னையில் தற்போது பாதிப்பு எண்ணிக்கை ஆயிரத்துக்குள் கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில், பிற மாவட்டங்களில் அதிக அளவில் பாதிப்பு பதிவாகிறது.

இந்நிலையில், தமிழகத்தில் கரோனா பாதிப்பு மற்றும் அரசு மேற்கொண்டு வரும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து இன்றைய ஆலோசனையின்போது பிரதமரிடம் முதல்வர் பழனிசாமி விளக்குவார். அரசு அளித்துள்ள தளர்வுகள், தொழில் நிறுவனங்களின் செயல்பாடு குறித்தும் முதல்வர் எடுத்துரைப்பார் என தெரிகிறது.

கரோனா சிகிச்சைக்கான மருத்துவ உபகரணங்கள் வாங்க ரூ.3 ஆயிரம் கோடியும், பொருளாதார நிலையை மீட்டெடுக்க சிறப்பு நிதியாக ரூ.9 ஆயிரம் கோடியும் வழங்க வேண்டும் என்று முந்தைய கூட்டங்களில் பிரதமரிடம் முதல்வர் கோரியிருந்தார். இந்த கோரிக்கைகளை மீண்டும் வலியுறுத்துவதுடன் பள்ளிகள், பெரிய வழிபாட்டுத் தலங்களை திறப்பது, பொதுப் போக்குவரத்தை தொடங்குவது உள்ளிட்ட விஷயங்கள் குறித்தும் பிரதமருடனான ஆலோசனையின்போது முதல்வர் முன்வைப்பார் என அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. முதல்வர்கள் கூறும் கருத்துகளின் அடிப்படையில், பிரதமரின் அடுத்தகட்ட அறிவிப்புகள் வெளியாகும் என தெரிகிறது.

## இன்று கிருஷ்ண ஜெயந்தி கொண்டாட்டம்

# ஆளுநர், முதல்வர், துணை முதல்வர், தலைவர்கள் வாழ்த்து

■ சென்னை



▲ நாடு முழுவதும் கிருஷ்ண ஜெயந்தி இன்று கொண்டாடப்படும் நிலையில், திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை அடுத்த சுருட்டப்பள்ளியில் சாலையோரம் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள விதவிதமான கிருஷ்ணர் பொம்மைகளுக்கு வர்ணம் பூசும் வட மாநிலப் பெண். படம்: ம.பிரபு

கிருஷ்ண ஜெயந்தி இன்று கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, தமிழக ஆளுநர், முதல்வர், துணை முதல்வர் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

**ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்:** தமிழக மக்களுக்கு எனது இனிய கிருஷ்ண ஜெயந்தி நல்வாழ்த்துகள். நன்மையால் தீமையை வெல்ல கிருஷ்ணர் இப்பூவுலகில் அவதரித்ததை இந்த விழா காட்டுகிறது. கிருஷ்ண அவதாரத்தில் கடவுள் தீயசக்திகளை வெல்வதுடன், பகவத்கீதையில் சொல்லப்பட்டுள்ள போதனைகள் வாயிலாக மனிதாபிமானத்துக்கான நல்வழியைக் காட்டுகிறார். வாழ்க்கையில் நன்மை, நல்லொழுக்கம் பேண உறுதியேற்போம். இந்த விழா நமது மாநிலத்தில் அமைதி, நட்புணர்வு, நல்லிணக்கம், வளமை, ஆரோக்கியத்தை கொண்டு வரட்டும்.

**முதல்வர் பழனிசாமி:** ''அறம் பிறழ்கின்றபோது நான் இவ்வுலகில் அவதரிப்பேன்'' என்று உரைத்த பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அவதரித்த தினமான ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி திருநாளைக் கொண்டாடும் மக்களுக்கு ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி நல்வாழ்த்துகள். ஒப்பற்ற ஞான நூலான பகவத்கீதையை உலகுக்கு அருளிய ஸ்ரீகிருஷ்ணர் அவதரித்த இத்திருநாளில், கீதையின் போதனைகளான அனைவரிடத்திலும் அன்பு செலுத்துதல், பலன் கருதாமல் கடமையைச் செய்தல், பற்றற்று இருத்தல், எளிமையாக வாழ்தல் போன்றவற்றை பின்பற்றி, மகிழ்வுடன் வாழ்ந்திட வாழ்த்துகிறேன்.

**துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம்:** ''நல்லோரைக் காக்கவும், தீயன செய்வோரை அழிக்கவும், அறத்தை நிலைநிறுத்தவும் யுகம்தோறும் பிறக்கிறேன்'' என்று உரைத்த காக்கும் கடவுள் பகவான் மகாவிஷ்ணு, ஸ்ரீகிருஷ்ணராக அவதரித்த திருநாளை உவகையோடு கொண்டாடும் மக்களுக்கு கிருஷ்ண ஜெயந்தி நல்வாழ்த்துகள்.

**அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன்:** ''பலனை எதிர்பாராமல் கடமையைச் செய்தால், எடுத்த செயலில் வெற்றி பெறலாம்'' என்ற கிருஷ்ணரின் கீதை உபதேசத்தை நெஞ்சில் நிறுத்தி, வெற்றிகளைக் குவிப்போம். அதர்மத்தை அகற்றி, தர்மம் செழிக்கவும், சத்தியம், அன்பை நிலைத்திடச் செய்யவும் உறுதியேற்போம்.

**தமாகா தலைவர் ஜி.கே.வாசன்:** துன்பங்கள் நீங்கி இன்பங்கள் சேர்க்கும் இந்த திருநாள், கரோனாவை அழித்து நன்மை பயக்கும் நாளாக மலர வாழ்த்துகிறேன்.

ஐஜேகே தலைவர் ரவி பச்சமுத்து, பெருந்தலைவர் மக்கள் கட்சித் தலைவர் என்.ஆர். தனபாலன் உள்ளிட்டோரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.



▲ 74-வது சுதந்திர தினம் நாடு முழுவதும் கொண்டாடப்பட உள்ள நிலையில், சென்னை கோட்டை கொத்தளம் அருகே ராஜாஜி சாலையில் இரண்டாம்கட்ட அணிவகுப்பு ஒத்திகை நேற்று காலை நடந்தது. படம்: பு.க.பிரவீன்

## தமிழகம் முழுவதும் 137 நாட்களுக்கு பிறகு

# மாநகராட்சிகளில் சிறிய வழிபாட்டுத் தலங்கள் திறப்பு

### ● பக்தர்கள் குடும்பத்துடன் சுவாமி தரிசனம்

■ சென்னை



▲ தமிழகம் முழுவதும் மாநகராட்சிப் பகுதிகளில் சிறிய வழிபாட்டுத் தலங்கள் நேற்று திறக்கப்பட்டன. சென்னை கோடம்பாக்கம் பாலமுருகன் கோயிலில் உள்ள சிவன் சன்னதியில் நேற்று நடந்த பூஜையில் பங்கேற்று வழிபட்ட பக்தர்கள். படம்: ம.பிரபு

சென்னை உட்பட தமிழகம் முழுவதும் உள்ள 15 மாநகராட்சிகளில் 137 நாட்களுக்கு பிறகு, சிறிய வழிபாட்டுத் தலங்கள் திறக்கப்பட்டன. கோயில்களில் பக்தர்கள் குடும்பத்துடன் சுவாமி தரிசனம் செய்தனர்.

தமிழகம் முழுவதும் கரோனா வைரஸ் பரவல் காரணமாக கடந்த மார்ச் 24-ம் தேதி முதல் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. கோயில்கள், மசூதிகள், தேவாலயங்களில் வழிபாடு நடத்த தற்காலிக தடை விதிக்கப்பட்டது. பின்னர், ஊரடங்கில் தளர்வுகள் அறிவிக்கப்பட்டதால் ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி பகுதிகளில் உள்ள சிறிய கோயில்கள், மசூதிகள், தேவாலயங்கள் உள்ளிட்டவை திறக்கப்பட்டன.

#### 15 மாநகராட்சிகளில்..

இந்நிலையில், சென்னை, கோவை, ஈரோடு, மதுரை உள்ளிட்ட 15 மாநகராட்சிகளில் ரூ.10 ஆயிரத்துக்கும் குறைவான ஆண்டு வருமானம் கொண்ட கோயில்கள், சிறிய மசூதிகள், தேவாலயங்கள் 137 நாட்களுக்குப் பிறகு நேற்று திறக்கப்பட்டன.

அதிகாலையில் இருந்தே கோயில்களுக்கு பக்தர்கள் வரத் தொடங்கினர். தெர்மல் ஸ்கேனர் கருவியின் மூலம் பக்தர்களின் உடல் வெப்ப அளவு பரிசோதனை செய்யப்பட்டது.

கோயில் வாசலில் கைகழுவும் திரவங்கள் வைக்கப்பட்டிருந்தன. இவற்றால் கையை சுத்தம் செய்த பிறகு முகக் கவசம் அணிந்திருந்தவர்கள் மட்டும் அனுமதிக்கப்பட்டனர்.

#### சிலையை தொடக் கூடாது

பூ, பழம், தேங்காய் ஆகியவற்றை கோயிலுக்குள் கொண்டு வர அனுமதிக்கப்படவில்லை. மேலும், சுவாமி சிலையை தொடக் கூடாது என்று கோயில் அர்ச்சகர்கள் பக்தர்களுக்கு அறிவுறுத்தினர்.

இவ்வாறு அரசு கூறிய வழிகாட்டுதல்களைப் பின்பற்றி நேற்று நாள் முழுவதும் சிறிய கோயில்களுக்கு பக்தர்கள் வந்து சுவாமி தரிசனம் செய்தனர்.

இதே போல், மசூதி, தேவாலயங்களிலும் தமிழக அரசு கூறிய வழிகாட்டுதல்களைப் பின்பற்றி வழிபாடுகள் நடைபெற்றன.

## 10% இட ஒதுக்கீட்டால் ஐஏஎஸ், ஐபிஎஸ் தேர்வுகளில்

# ஓபிசி, எஸ்சி, எஸ்டி மாணவர்களுக்கு அநீதி

### ● திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டு

■ சென்னை



பொருளாதாரத்தில் பின்தங்கியோருக்கான 10 சதவீத இட ஒதுக்கீட்டால் ஐஏஎஸ், ஐபிஎஸ் தேர்வுகளில் ஓபிசி, எஸ்சி, எஸ்டி மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கை:

பொருளாதாரத்தில் பின்தங்கியோருக்கான 10 சதவீத இடஒதுக்கீடு, குடிமைப் பணிகள் தேர்வின் ஒவ்வொரு கட்டத்திலும் சமூகநீதிக்கு பெரும் பாதகம் விளைவித்துள்ளது.

குடிமைப் பணி தேர்வின் முதல்நிலை தேர்வுக்கான 'கட் ஆப்' மதிப்பெண்கள் ஓபிசி-க்கு 95.34. ஆனால், பொருளாதாரத்தில் பின்தங்கியோருக்கான 10 சதவீத இட ஒதுக்கீட்டுக்கு 90. ஓபிசி-யை விட 5.34 மதிப்பெண்கள் குறைவாக பெற்றிருந்தாலும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பொதுப் பிரிவினர் முதன்மைத் தேர்வு எழுத தேர்வாகியுள்ளனர்.

முதன்மைத் தேர்வில் ஓபிசி-க்கு 718, பட்டியலினத்தோருக்கு 706, பழங்குடியினருக்கு 699, பொருளாதாரத்தில் பின்தங்கிய10 சதவீத இட ஒதுக்கீட்டு பிரிவினருக்கு 696 என்று கட்-ஆப் மதிப்பெண்கள். இதனால், சமூகநீதியின்கீழ் இடஒதுக்கீடு உரிமை பெற்ற ஓபிசி, பட்டியலின மற்றும் பழங்குடியினர் ஆகியோர் பொதுப் பிரிவினருக்கும் பின்னால் நிற்கும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

'நேர்காணல்' கட் ஆப் மதிப்பெண்களின் அடிப்படையில் பொருளாதாரத்தில் பின்தங்கிய பொதுப் பிரிவினர் 909 மதிப்பெண்கள் பெற்று ஐஏஎஸ், ஐபிஎஸ், ஐஎஃப்எஸ் அதிகாரிகளாக தேர்வாகியுள்ளனர். ஆனால், ஓபிசி பிரிவினர் 925 மதிப்பெண்கள் எடுத்தால் மட்டுமே தேர்வாக முடியும் என்ற அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

927 பணியிடங்களுக்கு, 829 பேர் மட்டுமே தேர்வு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளனர். மீதி 98 பணியிடங்களுக்கு காத்திருப்பு பட்டியலில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் இருப்போர் பெயர்கள் வெளியிடப்படவில்லை. இந்தியாவின் நிர்வாகக் கட்டமைப்பில் உரிமை பெற ஓபிசி, பட்டியலின, பழங்குடியினருக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது ஏன்?

பிரதமர் மோடி, இதுகுறித்து சம்பந்தப்பட்ட அமைச்சகத்துடன் விரிவான ஆலோசனை நடத்தி ஓபிசி, பட்டியலின, பழங்குடியின சமுதாயங்களின் இடஒதுக்கீட்டு உரிமையை நிலைநாட்டி நியாயம் வழங்க வேண்டும்.

இவ்வாறு ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

## ரஷ்யாவில் ஆற்றில் மூழ்கி உயிரிழந்த

# 4 மாணவர்கள் குடும்பத்துக்கு முதல்வர் பழனிசாமி இரங்கல்

### ● உடல்களை சொந்த ஊர் கொண்டுவர ஏற்பாடு

■ சென்னை

ரஷ்யாவில் ஆற்றில் மூழ்கி இறந்த 4 மருத்துவ மாணவர்கள் குடும்பங்களுக்கு முதல்வர் பழனிசாமி இரங்கல் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்ட அறிக்கை:

ரஷ்யாவில் உள்ள வால்கோகிராட் ஸ்டேட் மருத்துவ பல்கலைக்கழகத்தில் மருத்துவம் பயின்று வந்த திருப்பூர் ஆஷிக், கடலூர் விக்னேஷ், சேலம் மனோஜ், சென்னை ஸ்டீபன் ஆகிய 4 மாணவர்களும், கடந்த 8-ம் தேதி ரஷ்யாவில் உள்ள வோல்கோ ஆற்றில் குளித்தபோது நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

இந்தச் செய்தியை அறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன். உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய வெளியுறவு அமைச்சகம் மற்றும் ரஷ்யாவில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு, மாணவர்களின் உடல்களை சொந்த ஊர்களுக்கு கொண்டுவர தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் உடனே எடுக்க உயர் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அனைத்து ஒருங்கிணைப்பு பணிகளையும் தமிழக அரசு உயர் அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு முதல்வர் தெரிவித்துள்ளார்.


படிவம் – G

எக்ஸ்ப்ரஷன் ஆஃப் இன்ட்ரஸ்ட்டிற்கான அழைப்பு

(நிறுவன திவால் மற்றும் பேங்க்ரப்ட்ஸி ரெகுலேஷன் விதி 36A(1)
(பெருநிறுவன திவால் ரிசொல்யூஷன் ப்ராசஸ்) ரெகுலேஷன்ஸ், 2016.

பொருத்தமான விபரங்கள்

| வ. எண் | விபரங்கள் | விளக்கம் |
|---|---|---|
| 1. | கார்ப்பொரேட் கடனாளியின் பெயர் | **காமாட்சி இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட்** (முந்தைய காமாட்சி ஸ்பான்ஜ் & பவர் கார்பொரேட் லிமிடெட்). |
| 2. | கடனாளியாக சேர்க்கப்பட்ட தேதி | 08.10.2003. |
| 3. | பெரு நிறுவன கடனாளியின் பதிவு | கம்பெனிகள் பதிவாளர், சென்னை. |
| 4. | நிறுவன அடையாள எண் / வரையறை பொறுப்பு எண் | U27106TN2003PLC051727 |
| 5. | நிறுவன பதிவு & முதன்மை அலுவலக முகவரி | ஏபிசி டிரேட் சென்டர், ப.எண்.50, பு.எண்.39, 3–ம் தளம், அண்ணா சாலை, சென்னை, தமிழ்நாடு–600002. |
| 6. | பெருநிறுவன திவால் தொடக்க தேதி | NCLT ஆணை தேதி 19.02.2020. NCLT இணைய வெளியீடு 25.02.2020. |
| 7. | எக்ஸ்ப்ரஷன் ஆஃப் இன்ட்ரஸ்ட் நாள் | 11.08.2020. |
| 8. | விதி 25(2)(h)–ன் படி ரிசொல்யூஷன் விண்ணப்பம் பெற தகுதி | விண்ணப்பங்களை பெற ip.kamachi@gmail.com & vikas.gupta@bngca.com |
| 9. | பிரிவு 29A–ல் தகுதியின்மைக்கான விபரங்களை அறிய | சமீபத்திய அப்டேட் இணைய முகவரி :– https://www.ibbi.gov.in |
| 10. | எக்ஸ்ப்ரஷன் ஆஃப் இன்ட்ரஸ்ட் விண்ணப்பம் பெற கடைசி நாள் | 26.08.2020. |
| 11. | விண்ணப்தாரர்களின் ப்ரொவிஷனல் விண்ணப்ப பட்டியல் வழங்கும் நாள் | 03.09.2020. |
| 12. | மறுப்பு தெரிவிக்க கடைசி நாள் | 08.09.2020. |
| 13. | இறுதி பட்டியல் வெளியிடும் நாள் | 17.09.2020. |
| 14. | விண்ணப்பதாரருக்கு ரிசொல்யூஷன் மெமோரென்டம் தகவல், மேட்ரிக்ஸ் மதிப்பீடு வழங்கும் நாள் | 08.09.2020. |
| 15. | ரிசொல்யூஷன் திட்டம், மெமோரன்டம் தகவல்,மேட்ரிக்ஸ் மதிப்பீடு,பிற தகவல் பெறுவதற்கான முறை | ரிசொல்யூஷன் விண்ணப்பதாரர்கள் ரிசொல்யூஷன் திட்டம், மேட்ரிக்ஸ் மதிப்பீடு அனுப்ப / பெற :– ip.kamachi@gmail.com & vikas.gupta@bngca.com |
| 16. | ரிசொல்யூஷன் ப்ளான் சமர்ப்பிக்க | 09.10.2020. |
| 17. | ரிசொல்யூசன் ப்ளான் சமர்ப்பிக்கும் முறை | அஞ்சல் மூலம் வ.எண்.21–ல் காணும் அலுவலக முகவரிக்கு & பாஸ்வேர்ட் கொண்ட சாஃப்ட் காப்பி அனுப்புவதற்கு :– ip.kamachi@gmail.com & vikas.gupta@bngca.com |
| 18. | ரிசொல்யூஷனை அட்ஜீடிகேட்டிங் அதாரிட்டிக்கு அனுப்பவுள்ள தேதி | 09.11.2020 |
| 19. | ரிசொல்யூஷன் வல்லுநரின் பெயர் & பதிவு எண். | **திரு.விகாஸ் பிரகாஷ் குப்தா.** **IBBI/IPA-001/IP-P00501/2017-2018/10889.** |
| 20. | ரிசொல்யூஷன் வல்லுநரின் பெயர் & முகவரி & மின்னஞ்சல் முகவரி | **திரு.விகாஸ் பிரகாஷ் குப்தா,** vikas.gupta@bngca.com தீப்தி என்டர்பிரைசஸ், 55, நேரு புல்டா, இட்வாரி, நாக்பூர், மஹாராஷ்டிரா–440002. |
| 21. | ரிசொல்யூஷன் வல்லுநரை கடிதம் மூலம் தொடர்பு கொள்ள முகவரி & மின்னஞ்சல் | E-mail ID : ip.kamachi@gmail.com தீப்தி ரஞ்சன் மிஷ்ரா, எண்.10/25, தரை தளம், சௌராஷ்டிரா நகர், 6–ம் தெரு, சூளைமேடு, சென்னை – 600094. |
| 22. | பிற விபரங்களுக்கு | **திரு.விகாஸ் பிரகாஷ் குப்தா.** E-mail ID-vikas.gupta@bngca.com & ip.kamachi@gmail.com |
| 23. | படிவம் G பிரசுர தேதி | 11.08.2020. |

**நாள் : 11.08.2020.**
**இடம் : மும்பை.**

**காமாட்சி இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டிற்காக.**
**விகாஸ் பிரகாஷ் குப்தா,**
**ரிசொல்யூஷன் வல்லுநர்,**
**காமாட்சி இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட்.**


## மணலியில் இருந்து ஹைதராபாத்துக்கு

# எஞ்சிய அமோனியம் நைட்ரேட் ஓரிரு நாளில் அனுப்பப்படும்

■ சென்னை

கரூரை சேர்ந்த அம்மன் கெமிக்கல்ஸ், உக்ரைனில் இருந்து இறக்குமதி செய்த 740 டன் அமோனியம் நைட்ரேட், சென்னை துறைமுகத்தில் கடந்த 5 ஆண்டுகளாக இருப்பு வைக்கப்பட்டுள்ளது. அனுமதியின்றி இறக்குமதி செய்யப்பட்டதாக, சென்னை சுங்கத் துறையால் பறிமுதல் செய்யப்பட்ட இது, மணலி சரக்குப் பெட்டக முனையத்தில் 37 கன்டெய்னர்களில் வைக்கப்பட்டுள்ளது.

லெபனானில் அமோனியம் நைட்ரேட் வெடித்த விபத்தில் 138 பேர் உயிரிழந்த சம்பவத்தை அடுத்து, மணலியில் இருந்து அமோனியம் நைட்ரேட்டை அப்புறப்படுத்த சுங்கத் துறைக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், உத்தரவிட்டது. இதையடுத்து, அமோனியம் நைட்ரேட்டை சுங்கத் துறை ஏலம் விட்டது. ஹைதராபாதில் உள்ள சால்வோ கெமிக்கல்ஸ் அண்ட் எக்ஸ்புளோசிவ் நிறுவனம் இதை ஏலம் எடுத்தது.

இந்நிலையில், மணலியில் இருந்து லாரிகள் மூலம் 10 கன்டெய்னர்கள் ஹைதராபாதில் உள்ள சால்வோ நிறுவனத்துக்கு நேற்று முன்தினம் அனுப்பப்பட்டது. மற்ற 27 கன்டெய்னர்கள் ஓரிரு நாளில் அனுப்பப்படும் என்று சுங்கத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். சென்னை காவல் ஆணையர் மகேஷ்குமார் அகர்வால் இதை உறுதிப்படுத்தினார்.

நாடு முழுவதும் துறைமுகங்களில் கோரப்படாத ரூ.20 ஆயிரம் கோடி சரக்குகளை மத்திய அரசு ஏல முறையில் அகற்ற வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. அவற்றில் ஆபத்து விளைவிக்கும் பொருட்கள்கூட இருக்கலாம். மத்திய அரசு அவற்றை ஏலத்தில் விடவேண்டும் என்று சென்னை சுங்கத் துறை முகவர்கள் சங்க முன்னாள் தலைவர் கிரி தெரிவித்தார்.

## சிஐஎஸ்எப் அதிகாரியுடனான சர்ச்சை

# கனிமொழி தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கிவிட்டதாக பாஜக கருத்து

■ சென்னை

விமான நிலையத்தில் மத்திய தொழில் பாதுகாப்புப் படை (சிஐஎஸ்எப்) பெண் அதிகாரி ஒருவருடனான சர்ச்சையை வைத்து தேர்தல் பிரச்சாரத்தை திமுக எம்.பி. கனிமொழி தொடங்கிவிட்டதாக பாஜக நிர்வாகி கருத்து தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற நிலைக் குழு கூட்டத்தில் பங்கேற்பதற்காக திமுக எம்.பி. கனிமொழி நேற்று முன்தினம் டெல்லி சென்றார். முன்னதாக சென்னை விமான நிலையத்தில் தன்னிடம் பேசிய சிஐஎஸ்எப் பெண் அதிகாரியிடம், ஆங்கிலம் அல்லது தமிழில் பேசுங்கள் என கனிமொழி கூறியுள்ளார். அதற்கு அவர், ''நீங்கள் இந்தியரா'' என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த சம்பவத்தை ட்விட்டரில் பதிவிட்ட கனிமொழி, 'இந்தி தெரிந்தால்தான் இந்தியர் என்ற நிலை உருவானது எப்போது' என்று கேள்வி எழுப்பியிருந்தார். முன்னாள் மத்திய அமைச்சர்கள் ப.சிதம்பரம், ஜெய்ராம் ரமேஷ் உள்ளிட்டோர் கனிமொழிக்கு ஆதரவு தெரிவித்திருந்தனர்.

இந்த புகார் குறித்து ட்விட்டரில் பதிலளித்த சிஐஎஸ்எப் நிர்வாகம், 'கனிமொழி புகார் தொடர்பாக விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட மொழியில்தான் பேச வேண்டும் என்று எந்த கொள்கையும் சிஐஎஸ்எப்-க்கு கிடையாது' என்று விளக்கம் அளித்தது.

இந்நிலையில், கனிமொழியின் ட்விட்டர் செய்தியை பகிர்ந்துள்ள பாஜக தேசிய அமைப்பு பொதுச் செயலாளர் பி.எல்.சந்தோஷ், 'தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கு இன்னமும் 8 மாதங்கள் இருக்கின்றன. அதற்கு பிரச்சாரம் தொடங்கப்பட்டு விட்டது' என்று ட்வீட் செய்துள்ளார்.

பொதுவாக பாஜக அமைப்பு பொதுச்செயலாளர் பதவியில் இருப்பவர்கள் வெளிப்படையான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட மாட்டார்கள். ஆனால், கர்நாடகாவைச் சேர்ந்த சந்தோஷ், ட்விட்டரில் தொடர்ந்து அரசியல் கருத்துகளை தெரிவித்து வருகிறார். பாஜக தேசிய இணை அமைப்பு பொதுச்செயலாளராக இருந்த அவர், தமிழக பொறுப்பாளராகவும் பல ஆண்டுகள் இருந்துள்ளார். தமிழகத்தில் ஒன்றிய அளவில் சுற்றுப்பயணம் செய்துள்ளார். தமிழக அரசியலில் அவர் கருத்து வெளியிட்டுள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

சந்தோஷின் கருத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ள விருதுநகர் காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூர், 'சந்தோஷின் கருத்தில் ஆணவம் தெரிகிறது. இப்பிரச்சினையை திமுக - பாஜக இடையிலான பிரச்சினையாக மாற்றப் பார்க்கிறார்' என்று தெரிவித்துள்ளார்.